செ.வெ.எண்:15 நாள்:10.06.2021

## நாமக்கல் மாவட்டம்

**இராசிபுரம் வட்டத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் சுகாதார பணியாளர்கள் வீடு, வீடாகச் சென்று பொதுமக்களுக்கு பல்சாக்சிமீட்டர் பயன்படுத்தி ஆக்சிஜன் அளவு கணக்கீடு செய்யப்படும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ்.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொரோனா நோய்த்தொற்று ஏற்பட்டவர்களுக்கு பல்வேறு சிகிச்சை வசதிகளை மேம்படுத்துவதோடு நில்லாமல், கொரோனா பரவலைத்தடுக்க சுகாதார பணியாளர்கள் மூலம் வீடுவீடாகச் சென்று பொதுமக்களின் உடல்நிலை குறித்து பரிசோதிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

நாமக்கல் மாவட்டத்தில் கெரோனா நோயாளிகளுக்காக கூடுதல் படுக்கைகள், ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய படுக்கைகள், சித்த மருத்துவ கொரோனா சிறப்பு சிகிச்சை மையம், கூடுதல் படுக்கைகளுக்காக தனியார் மற்றும் அரசு கல்லூரிகளில் கொரோனா சிறப்பு சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டு சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் கொரோனா நோய்த்தொற்று உள்ளானவர்களுக்கு உடனடியாக சிகிச்சை மேற்கொள்வதன் மூலம் விரைவாக குணமடையலாம் என்பதற்காக, சுகாதாரத்துறையின் மூலம் காய்ச்சல் முகாம்கள் அமைக்கப்பட்டு நோயாளிகள் கண்டறியப்பட்டு வருகின்றனர்.

நாமக்கல் மாவட்டத்திலுள்ள நகராட்சி, ஊராட்சி, பேரூராட்சி பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு காய்ச்சல் பரிசோதனை செய்ய சுகாதாரப்பணியாளர்களுடன், தன்னார்வலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் கட்டுப்பாட்டு பகுதியில் உள்ள வீடுகளில் ஒரு தன்னார்வலருக்கு 100 பொதுமக்கள் என்ற அடிப்படையில் பொதுமக்களுக்கு காய்ச்சல் உள்ளதா, அவர்களின் ஆக்ஸிஜன் அளவு குறித்து கண்டறியும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆக்ஸிஜன் அளவு குறைவாக உள்ள பொதுமக்களை கண்டறிந்து அவர்களுக்கு உடனடியாக சிகிச்சை வழங்கி அவர்களை முதல் நிலையிலேயே கொரோனாவிலிருந்து காக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளினால் ஆக்ஸிஜன் மிகவும் குறைந்த நிலையில் மருத்துவமனைகளுக்கு நோயாளிகள் வருவது தடுக்கப்படுவதுடன் மருத்துவமனைகளில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு பணிச்சுமை மற்றும் மனஅழுத்தம் ஏற்படுவது தடுக்கப்படும்.

அதன் அடிப்படையில் பிள்ளாநல்லூர் பேரூராட்சி, கூனவேலம்பட்டி ஊராட்சி பகுதிகளில் கொரோனா நோய்த்தொற்று கட்டுப்பாட்டு பகுதிகள் மற்றும் உள்ளாட்சி நிர்வாக பகுதிகளில் சுகாதார பணியாளர்கள் வீடு, வீடாகச் சென்று பொதுமக்களுக்கு பல்சாக்சிமீட்டர் பயன்படுத்தி ஆக்சிஜன் அளவு கணக்கீடு

செய்யப்படுவதையும், இன்ப்ராரெட் தெர்மாமீட்டர் கொண்டு வெப்பநிலை கணக்கீடு செய்யப்படுவதையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இன்று (10.6.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இராசிபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோனேரிப்பட்டி ஊராட்சி, காக்காவேரி ஊராட்சி, வேலம்பாளையம் ஊராட்சி பகுதிகளிலும், நாமகிரிப்பேட்டை பேரூராட்சி பகுதிகள், நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் தொ.ஜேடர்பாளையம், தொப்பம்பட்டி, பச்சுடையாம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது வீடுகளில் உள்ள நபர்களுக்கு ஆக்ஸிஜன் அளவு பரிசோதிக்கப்பட்ட விவரங்களை பதிவேடுகளில் பார்வையிட்டு, ஆக்ஸிஜன் அளவு குறைவாக உள்ள நபர்களை உடனடியாக அரசு மருத்துவமனை அல்லது ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு உடனே அழைத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து பிள்ளாநல்லூர் பேரூராட்சி, குருசாமிபாளையத்தில் வாகனங்களில் செல்பவர்கள் அரசு அறிவித்த ஊரடங்கு முறையாக கடைப்பிடிக்கிறார்களா என்பதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ். இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளில் இராசிபுரம் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் திரு.கே.பி.ஜெகநாதன், குருக்கபுரம் ஊரட்சித் தலைவர் திரு.கோவிந்தராஜ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.சீனிவாசன், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு.துவாரகநாத் சிங், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.உஷா (இராசிபுரம்), திரு.சுந்தரம், திரு.அருளப்பன் (நாமகிரிப்பேட்டை) உள்பட அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.**